# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஏப்ரல் 5, 2025

Weekly E-paper ● April 5, 2025


## கச்சத்தீவுக்காக போராடியது தி.மு.க! புறமொதுங்கியது அ.தி.மு.க !

எழில்.இளங்கோவன்



### மதவாத ஒன்றிய அரசுக்குக் கண்டனம்!

சாரதாதேவி

### "மார்க்சுக்குச் சிலை" - ஸ்டாலின்

தலையங்கம்

### திராவிட வரலாற்றுத் தடத்தில்..!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஏப்ரல் 5, 2025 Weekly E-paper ● April 5, 2025


# கச்சத்தீவுக்காக போராடியது தி.மு.க! புறமொதுங்கியது அ.தி.மு.க !

**எழில்.இளங்கோவன்**

இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியும், இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கையெழுத்திட்டு 08-07-1974 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது 'கச்சத்தீவு' ஒப்பந்தம். அது கச்சத்தீவு குறித்த ஒப்பந்தமா?

"பாக் நீரிணைக்கும், ஆதம் பாலத்திற்கும் இடையே உள்ள இலங்கை இந்திய வரலாற்று **நீர் எல்லையை வரையறுக்கும் ஒப்பந்தம்**" என்று சட்டச் சொற்களில் குறிக்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. அப்போது நடைமுறையில் இருந்த 1958 ஆம் ஆண்டு ஐ.நா. சட்டவரையறையின்படி இவ்வொப்பந்தம் கையெழுத்தாக வில்லை. 1958 ஐ.நாவின் பன்னாட்டு சட்டவிதியின்படி, இரண்டு நாடுகள் கடல் எல்லையைப் பிரிக்கும்போது அது இரு நாடுகளுக்கும் சமமாக அமையவேண்டும் என்கிறது.

அது இங்கு பின்பற்றப்பட வில்லை. இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்குள் (கடல்) தொலைவு 30 மைல். ராமேஸ்வரத்தில் இருந்து கச்சத்தீவுக்குத் தொலைவு 12 மைல். கச்சத்தீவுக்கும் தலைமன்னாருக்கும் இடையே உள்ள தொலைவு 18 மைல். இப்படி இருக்கும்போது 1958 பன்னாட்டுச் சட்டப்படி சரிபாதியாக நீர் எல்லையைப் பிரித்தால் 15/15ஆக வரும், அப்போது இந்திய கடல்15 மைல்களுக்குள் கச்சத்தீவு வந்துவிடும். ஆகவே நீர் எல்லையை வரையறுக்கும் இந்த (கச்சத்தீவு) ஒப்பந்தமே சரியானதல்ல.

அடுத்து கச்சத்தீவு குறித்த இந்த ஒப்பந்தம் சட்ட அங்கீகாரம் பெறவேண்டும் என்றால் இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 368இன்படி, சட்டப்பிரிவு 1 இல் திருத்தம் செய்ய வேண்டும். அப்படி ஏதும் சட்டத் திருத்தம் செய்யப்படவில்லை. ஆகவே பாக் நீரிணைக்கும், ஆதம் பாலத்திற்கும் இடையே உள்ள நீர் எல்லையை சட்டப்படியும், நேர்மையாகவும் இல்லாமல் போடப்பட்ட இந்த ஒப்பந்தம் மிகப்பலவீனமானது.

கச்சத்தீவு குறித்து அன்றைய இந்திய வெளியுறவுச் செயலாளர் கேவல்சிங் மூலம் அறிந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். ஆனால் மாநில அரசுடன் முறையாக இதுகுறித்து மத்திய அரசு பேசவில்லை. எனவே அனைத்துக் கட்சிக்கூட்டத்தை 30-06-1974 அன்று கோட்டையில் கூட்டினார். முதல்வர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர்களும்,

1) பொன்னப்ப நாடார் (காங்கிரஸ்),

2) ஏ.ஆர். மாரிமுத்து (இ. காங்கிரஸ்),

3) திருப்பூர் மொய்தீன் (முஸ்லிம் லீக்)

4)அரங்க நாயகம் (அ. தி. மு. க.),

5) வெங்கடசாமி (சுதந்திரா)

6) ஈ. எஸ். தியாகராஜன் (தமிழரசு கழகம்),

7) ஏ. ஆர். பெருமாள் (பார்வர்டு பிளாக்),

8) மணலி கந்தசாமி (தமிழ்நாடு கம்யூனிஸ்டு),

9) ம. பொ. சிவஞானம் (தமிழரசு),

10) ஜி. சாமிநாதன் (சுதந்திரா கட்சி),

11) அப்துல் வகாப் (முஸ்லிம் லீக்),

12) ஆறுமுகசாமி (இ. காங்கிரஸ்),

13) சக்தி மோகன் (பார்வட் பிளாக்).

14) ஏ. ஆர். தாமோதரன் (ஐக்கிய கட்சி), ஆகிய தலைவர்கள் கலந்து கொண்டார்கள். "இந்தியாவுக்குச் சொந்தமான, தமிழ்நாட்டிற்கு நெருக்கமான உரிமை கொண்ட கச்சத்தீவு பிரச்சனையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு ஆழ்ந்த வருத்தத்தைத் தருகிறது. அதனால் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவின் மீது இந்திய அரசுக்கு உரிமை இருக்கும் வகையில் செய்து தமிழக மக்களுக்கு மதிப்பு அளிக்க இத்தீர்மானம் வலியுறுத்துகிறது" என்று ஒரு தீர்மானம் போட்டார்கள்.

கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்துத் தலைவர்களும் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார்கள். **ஆனால், அ.தி.மு.க. பிரதிநிதியாக வந்த அரங்கநாயகம் மட்டும் தீர்மானத்தில் கையெழுத்திட மறுத்து வெளிநடப்பு செய்தார்.**

இவர்கள்தான் இன்று கூச்சல் போட்டுக் கத்துகிறார்கள், கலைஞர் கச்சத்தீவை தாரைவார்த்து விட்டார் என்று.

அதுமட்டுமல்ல! கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தம் இல்லை, அது தமிழ்நாட்டுடன் உரிமை கொண்டு, இந்தியாவுக்கு உட்பட்ட தீவு என்பதைப் பல ஆதாரங்களுடன் கலைஞர், இந்திராகாந்திக்குக் கடிதம் எழுதினார். அதில்,

" நெதர்லாந்து நாட்டு மன்னருக்கும், கேண்டி அரசருக்கும் இடையே 14-2-1766-ல் ஏற்பட்ட ஒப்பந்தம், டச்சு நாட்டிடம் இருந்த கடற்கரை பகுதிகள், இங்கிலாந்து அரசுக்கு மாற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தம், 17-3-1762-ல் ஜான்சூருடர் என்பவர் எழுதிய நினைவுக் குறிப்புகள், டச்சு, போர்த்துகீசிய மன்னர் காலத்து வரைபடங்கள் ஆகிய எல்லா குறிப்புகளும், கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதை

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# வக்ஃபு மசோதா நிறைவேற்றம், மதவாத ஒன்றிய அரசுக்குக் கண்டனம்!

சாரதாதேவி

மூன்றாம் முறையாக அரசு அமைத்தவுடன் தங்களுடைய நெடுநாள் திட்டமான வக்ஃபு வாரிய சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றி இருக்கிறது பாஜக ஒன்றிய அரசு. 232 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தும், நிதீஷ் குமார், சந்திரபாபு நாயுடு ஆதரவு உள்ளிட்ட 288 பேரின் வாக்குகளுடன் மக்களவையில் நிறைவேறி இருக்கிறது இந்த மசோதா.

2013-ல் கொண்டு வரப்பட்ட வக்ஃபு வாரிய திருத்தச் சட்டத்திற்குப்பின் 21 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பை வக்ஃபு வாரியம் வாங்கிக் குவித்திருப்பதாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா குதித்திருக்கிறார். இந்திய ரயில்வே துறைக்கும், பாதுகாப்புத் துறைக்கும் அடுத்தபடியாக வக்ஃபு வாரியமே இந்தியாவில் அதிகப்படியான சொத்துகளை வைத்திருப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார். ஓ! அப்படியும் இருக்கலாமோ என்று இந்திய பெரும்பான்மை மக்களை வாய் பிளக்கச் செய்து தங்கள் இஸ்லாமிய வெறுப்பு அரசியலை முன்நகர்த்தி இருக்கிறது ஆளும் பாஜக அரசு.

வக்ஃபு வாரிய சொத்துகளை இனி மாவட்ட ஆட்சியரே கண்காணிக்க முடியும். அதற்கென இருந்த ஆணையரின் அதிகாரங்களை பறித்திருக்கிறது பாஜக அரசு. இனி வக்ஃபு வாரியங்களில் இஸ்லாமியர் அல்லாதவர்கள் நிர்வாக உறுப்பினர்கள் ஆகமுடியும். வக்ஃபு வாரிய சொத்துக்கள், அவர்களுக்கு சொந்தமானவை என நிரூபிக்க முடியாவிட்டால், அவற்றை வக்ஃபு வாரியம் சொந்தம் கொண்டாட முடியாது. அவை அரசாங்க சொத்துகளாக ஆகிவிடும். எடுத்துக்காட்டாக, தாஜ்மஹால் வக்ஃபு வாரியத்திற்கு சொந்தம் என்று வாரியம் இதுவரை சொல்லி வருகிறது. இப்போது ஷாஜகான் வக்ஃபு வாரியத்திற்கு எழுதிக் கொடுத்த சொத்து பத்திரத்தை கேட்டிருக்கிறது பாஜக ஒன்றிய அரசு. வக்ஃபு வாரியத்தால் அதைக் கொடுத்து நிரூபிக்க முடியாவிட்டால் அந்த சொத்து அரசாங்கத்துக்கு சொந்தம் ஆகிவிடும். எப்படி இருக்கிறது, கதை? வக்ஃபு வாரிய சொத்துத் தகராறுகளில், தீர்ப்பாயத்தின் தீர்ப்பே இறுதியானது எனும் சட்டத்தையும் இந்தத் திருத்தம் திருத்தி அமைக்கிறது. இனி உயர் நீதிமன்றத்திற்கு நேரடியாக மேல் முறையீடு செய்யலாம்.

இஸ்லாமிய மக்களின் உணவு, உடை, பிள்ளைகள், திருமணம் என்று எல்லாவற்றிலும் கை வைத்த ஒன்றிய பாஜக அரசு, இப்போது அவர்களுடைய மத நிறுவனங்களின் அடிமடியிலும் கை வைத்திருக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் சிறுபான்மையினருக்கு வழங்கி இருக்கக்கூடிய எல்லா பாதுகாப்பு அம்சங்களின் மீதும் கல்லெறிந்து கலைத்துப் போடுகிறது பாஜக அரசு. அண்டை நாடுகளான பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், மியான்மர், வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளில், சிறுபான்மையினர் நடத்தப்படுவதைப் போல இந்தியாவில் நடத்தப்படுவதில்லை என்றும், அங்கிருக்கும் சிறுபான்மையினர் அகதிகளாக இந்தியாவிற்கு ஓடி வருகிறார்கள் என்றும் பெருமை அடித்திருக்கிறார் சிறுபான்மையினர் துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ. அவர் அவ்வாறு சொல்வதின் உட்பொருள் என்னவென்றால், இங்கிருக்கும் சிறுபான்மையினர் விரைவில் அந்த நிலையை எதிர்பார்க்கலாம் என்பதா? அல்லது இந்த நிலைக்கு நன்றியுடன் இருக்க வேண்டும் என்பதா? இந்திய சுதந்திரத்திற்கு முன்னால், இந்தியாவில் மூன்றில் ஒரு பகுதியினராக இருந்தனர் இஸ்லாமியர்கள். ஆனால் இந்திய இங்கு இஸ்லாமியர்கள் என்போர், அந்நிய நாடுகளில் இருந்து வந்தவர்கள் அல்லர். அவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள்.

அவர்கள் மீது ஆளும் இந்துத்துவ அரசால் அடுத்தடுத்து தொடுக்கப்படும் அம்புகள், நாடு முழுவதும் ஆறாத ரணங்களை ஏற்படுத்திப் போகிறது.

தமிழ்நாடு அரசு சென்ற வாரமே, வக்ஃபு வாரிய திருத்தச் சட்டத்தை கொண்டுவரக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. இன்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மீண்டும் ஒருமுறை நிறைவேற்றப் பட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி கேட்டுள்ளார். மாநிலங்கள் அவையில் பா.ஜ.க அரசின் வலிமை குறைவு. இருப்பினும், அவர்கள் குறுக்கு வழிகளை கண்டிப்பாக நாடுவார்கள். தி.மு.க உச்சநீதிமன்றத்தை நாடும் என அறிவித்திருக்கிறது. ஜனநாயக ஆற்றல்கள், சிறுபான்மையினருக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் அரசமைப்பு விழுமியங்களை பாதுகாக்க மீண்டும் மீண்டும் ஒன்றிணைவோம்! ●

---

## முன்பக்கத் தொடர்ச்சி...

காட்டவில்லை. 1954-ம் ஆண்டு வெளியான இலங்கையின் அதிகாரப்பூர்வ வரைபடத்திலும் (Map)கச்சத்தீவு இலங்கையின் ஒரு பகுதியாக குறிக்கப்படவில்லை..." என்றும், 1622 – 35 காலத்தில் தளவாய் கூத்தப்பத் தேவர் காலச்செப்பேடு, கச்சத்தீவு இராமநாதபுரம் சேதுபதிக்குச் சொந்தமாக இருந்தது உள்ளிட்ட ஆதாரங்களைக் கொடுத்தும் கச்சத்தீவை மீட்கப்போராடினர் கலைஞர். அதுமட்டுமல்ல, இதற்காகக் கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றன.

இது வரலாறு. அன்று காங்கிரஸ் மத்திய அரசு இதை ஏற்காததால், இன்று மீனவர்களின் துயர்துடைக்க, 02-04-2025 அன்று கச்சத்தீவை மீட்க சட்டமன்றத்தில் தனிநபர் தீர்மானம் நிறைவேற்றினார் முதல்வர் ஸ்டாலின் அவர்கள். அன்று கச்சத்தீவை மத்திய காங்கிரஸ் அரசு இலங்கைக்குத் தாரைவார்க்கும்போது அதை எதிர்த்தது தி.மு.கழகம், எதிர்த்தவர் கலைஞர். இன்று மீனவர்களுக்காகஅத்தீவை மீட்கப் போராடுவதும் தி.மு.கழகம், போராடுகிறார் தலைவர் ஸ்டாலின்.

அது மட்டுமின்றி கச்சத்தீவை இலங்கையிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்திற்கு எதிராக முன்னாள் முதல்வர்கள் கலைஞர் மற்றும் ஜெயலலிதா சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி. விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வந்தது. அமர்வில் கடந்த மார்ச் கடைசி வாரம் விசாரணைக்கு வந்த போது மனுதாரரான முன்னாள் முதல்வர் கலைஞர் தரப்பில் மூத்த வழக்குரைஞர் பி.வில்சன் ஆஜராகி மனுதாரரான முன்னாள் முதல்வர் கலைஞர் மறைந்து விட்டதால் அவருக்கு பதிலாக திமுக பொருளாளர் டி.ஆர். பாலுவை வழக்கில் மனுதாரராக சேர்த்து வழக்கை தொடர்ந்து நடத்த அனுமதி கோரினார் . இதற்கு அனுமதி அளித்தனர் நீதிபதிகள். ஜெயலலிதா தரப்பில் வழக்கை நடத்த எந்த முயற்சியும் செய்யவில்லை.

இனி, தமிழ்நாட்டு மீனவர்கள் மீது எந்த அக்கறையும் இல்லாத அ.இ.அ.தி.மு.கவுக்கு தி.மு.கவையோ, அதன் தலைவரான தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையோ குறை சொல்ல எந்த தகுதியும் இல்லை ! ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## "மார்க்சுக்குச் சிலை" - ஸ்டாலின்



தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் 19ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் பிறந்த பொதுவுடைமைச் சிந்தனையாளர் கார்ல் மார்க்சுக்கு சென்னையில் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

தி.மு.கழகத்திற்கு வராமல் இருந்திருந்தால் நான் கம்யூனிஸ்ட் ஆகியிருப்பேன் என்று ஒருமுறை குறிப்பிட்டார் கலைஞர்.

பகுத்தறிவாளரான தந்தை பெரியார் சோவியத்திற்குப் பயணம் மேற்கொண்டு சென்னை திரும்பிய பின்னர் திராவிட இயக்கத்தவர்களைத் 'தோழர்' என்று அழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

திராவிட இயக்கத்திற்கும், கம்யூனிசத்திற்கும் பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம். சில நாள்களுக்கு முன்னர் நாடாளு மன்றத்தில் திருச்சி சிவா பேசும் போது, தி.மு.க. கொடியில் இருக்கும் கருப்பு திராவிடம் என்றும், சிவப்பு கம்யூனிசம் என்று பேசியது குறிப்பிடத்தக்கது.

சமத்துவம், மனிதநேயம், சாதி மதமற்ற சமூகம், பெண்ணுரிமை இவைபோன்ற சமூக-அரசியல் பார்வையில் இரண்டும் ஒன்றாகத்தான் இருக்கிறது.

மதவாத ஆதிக்கத்தை திராவிடம் நேரடியாக எதிர்க்கிறது. மதத்தை அபின் என்றார் மார்க்ஸ்.

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள்" என்று முடிக்கிறது 'கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை.'

சமூக விஞ்ஞானத்தைப் பொருளியல் பார்வையில், உழைப்பை, வர்க்கப்போரை மூலதனத்தில் விளக்கியிருக்கும் கார்ல் மார்க்சுக்குச் சிலை என்றால் யாருக்குத்தான் முகம் மலராது.

ஸ்டாலின் என்ற பொதுவுடைமையாளரின் பெயரைத் தன் பெயராக வைத்திருக்கும் திராவிட முதல்வர் ஸ்டாலின், பொதுவுடைமைத் தந்தைக்குச் சிலை வைக்கிறார்.

கருத்து முதல்வாதங்களை வீழ்த்த பொருள்முதல் வாதங்கள் கைகோர்ப்பது, காலத்தின் கட்டாயம்.

முதலமைச்சரின் அறிவிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.



தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் பேராசிரியர்கள்(SCA) கூட்டமைப்பின் சார்பாகத் மாநிலத் தலைவர் இல.இராஜா, பொதுச் செயலாளர் செ. இரவி பொருளாளர் எ.வி.சுரேஸ் மற்றும் பொறுப்பாளர்கள் சமூகநீதி கண்காணிப்புக் குழுத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை 01-03-2025 அன்று சந்தித்து SCA 3% முன்னுரிமை உள்இட ஒதுக்கீடு, கல்வி நிறுவனங்கள் அரசு/தனியார் மற்றும் வேலைவாய்ப்பு நியமனங்களில் முறையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்து மனு அளித்தார்கள். உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகப் பேராசிரியர் சுபவீ அவர்கள் கூறினார்கள். எழில்.இளங்கோவன் உடன் இருந்தார்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# திராவிட வரலாற்றுத் தடத்தில்..!

**வெற்றிச்செல்வன்**



வரலாற்றை இரண்டு வழிகளில் அறியலாம். ஒன்று, நூல்களைப் படித்தும், கற்றோர் உரைக்கக் கேட்டும் அறிவது. மற்றொன்று, வரலாறு நடைபெற்றதாகச் சொல்லப்படும் இடங்களை நேரில் சென்று அறிவது. இதில் இரண்டாம் வழியானது, நமது நினைவை விட்டு என்றுமே அகலாதது. வரலாற்றின் காலகட்டத்திற்கே நம்மை எடுத்துச் செல்லும் வல்லமை கொண்டது. அவ்வகையில், திராவிட இயக்கத்தோடு தொடர்புடைய வரலாற்றுத் தடங்களை நேரில் கண்டு அறியும் நடைபயணம் திராவிடப் பள்ளியின் சார்பாக அவ்வப்போது நடைபெற்று வருகிறது.

கடந்த 16.03.2025 அன்று அன்னை மணியம்மையார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, அவரது வரலாறு தொடர்பான இடங்களைப் பார்வையிடத் திட்டமிடப்பட்டது. திராவிடப் பள்ளியுடன், திராவிடர் வரலாற்று ஆய்வு மையமும் இப்பயணத்தில் இணைந்தது, நடைபயணத்தை மேலும் செழுமையாக்கியது. திராவிடர் கழகத்தின் துணைப்பொதுச்செயலாளர் பிரின்சு என்னாரெசு பெரியார் இந்நடையை வழிநடத்தினார். Nபுதிய குரல் நிறுவனர் எழுத்தாளர் ஓவியா சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

சிம்சன் பெரியார் சிலையில் காலை 6.30 மணிக்கு இந்நடை தொடங்கியது. அவ்விடத்தில் பெரியார் சிலை வைக்கப்பட்ட வரலாறு விரித்துரைக்கப்பட்டது. அடுத்ததாக, அருகிலேயே மீரான் சாகிபு தெருவில் அமைந்துள்ள பெரியார் மாளிகைக்கு நடை தொடர்ந்தது. தந்தை பெரியாரும், அன்னை மணியம்மையாரும் வாழ்ந்த வீடு அமைந்திருந்த இடம் இது. மணியம்மையார் தனக்காக தந்தை பெரியார் வழங்கிய இடத்தை எவ்வாறு அமைப்புக்காகக் கொடுத்தார் என்ற வரலாறு நினைவுகூரப்பட்டது. அவ்விடத்தில் மணியம்மையார் குறித்த நினைவுகளைத் தோழர் ஓவியாவும் பகிர்ந்து கொண்டார்.

பெரியார் முன்னெடுத்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை, பெரியார் மறைந்த பின்னர் மீண்டும் தொடங்குகிறார் மணியம்மையார். தமிழ்நாடு முழுவதும் அஞ்சல் நிலையங்களின் முன்பு மறியல் நடத்தும் போராட்டத்தை முன்னெடுக்கிறார். சென்னையில் தலைமை அஞ்சல் நிலையம் முன்பாக, மணியம்மையார் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. அதன்பிறகு, அதே கோரிக்கையை வலியுறுத்தி ஒன்றிய அமைச்சருக்குக் கருப்புக்கொடி காட்டும் போராட்டமும் நடைபெற்றது. இதனை நினைவுகூரும் வகையில், அடுத்த இடமாகத் தலைமை அஞ்சல் நிலையத்திற்கு நடைபயணம் தொடர்ந்தது. அங்கு மணியம்மையாரின் போராட்டக் களங்கள் விடுதலை நாளேட்டின் படிகளோடு (நகல்) விளக்கப்பட்டன. மேலும், தமிழ்நாட்டின் வேலைவாய்ப்புகள் தமிழருக்கே வழங்கப்பட வேண்டும் என்ற அன்னை மணியம்மையாரின் கோரிக்கை உட்பட பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

அடுத்ததாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு அன்னை மணியம்மையார் சிலை வைத்த இடம் நோக்கி திராவிட நடை நகர்ந்தது. கலைஞருக்குத் தந்தை பெரியாரால் சிலை அமைப்பு அறிவிக்கப்பட்டது தொடங்கி, தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது சிலை சேதப்படுத்தப்பட்டது வரையிலான வரலாற்று விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டன. அப்போது கலைஞர் எழுதிய புகழ்பெற்ற கவிதையும் நினைவுகூரப்பட்டது.

அடுத்து, மணியம்மையாரின் காலத்தில், எம்.ஜி.ஆர் தந்தை பெரியாருக்குச் சிலை வைத்த இடமான அண்ணா மேம்பாலத்திற்கு திராவிட நடைப்பயணம் விரிந்தது. அவ்விடத்தில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் குறித்துப் பேசும்போது, எம்.ஜி.ஆர். சொன்ன பிழையான வரலாறும், அதற்கு மணியம்மையார் விடுதலை இதழிலேயே துணிச்சலோடு மறுப்பு எழுதியதுமான தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இறுதியாக, பெரியார் திடலைச் சென்றடைந்தது திராவிட நடை. அங்கே, இந்தியாவே அதிர்ந்த இராவண லீலாவை அன்னை மணியம்மையார் நடத்திக் காட்டிய வரலாறு, அவசரநிலைப் பிரகடனத்தின்போது திராவிடர் கழகத்தினர் எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் ஆகியவை விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. பெரியார் அருங்காட்சியகம் தோழர்களால் பார்வையிடப்பட்டது. அதன்பிறகு, திராவிடர் கழகத்தினரோடு இணைந்து, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்களும், திராவிடப் பள்ளி மாணவர்களும் அன்னை மணியம்மையாரின் சிலைக்கு மாலை அணிவித்து முழக்கங்களை எழுப்பினர். திராவிட நடை இனிதே நிறைவுபெற்றது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian